செ.வெ.எண்: 483 நாள்: 05.08.2020

**<u>கிறத்துவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு நிதி உதவி வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., தகவல்</u>**

தமிழ்நாட்டில் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் கிறித்துவ தேவாலங்களை பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு நடப்பாண்டில் (2020-2021) நிதி உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இப்பணிக்காக தமிழக அரசு சுமார் ரூ.1.00 கோடி சிறுபான்மையினர் நலத்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தகுதியின் அடிப்படையில் நிதி உதவி வழங்கிட தயாராக உள்ளமையால், கிறித்துவ தேவாலயங்களிடமிருந்து அதிகமான அளவில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எனவே, பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு நிதி வழங்கப்படும்.

தகுதிகள்:

1. கிறித்துவ தேவாலயம் 10 ஆண்டுகளுக்கு மேலாக சொந்த கட்டடத்தில் இயங்கி இருத்தல் வேண்டும். தேவாலயம் கட்டப்பட்ட இடம் பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். தேவாலயமும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. தேவாலயத்தின் சீரமைப்பு பணிக்காக வெளிநாட்டிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றிருத்தல் கூடாது. சான்றிதழ் உரிய படிவத்தில் அளிக்கவேண்டும்.

3. தேவாலய கட்டிடத்தின் வயதிற்கேற்ப 10-15 வருடம் வரை ரூ1 இலட்சமும், 15-20 வருடம் வரை ரூ. 2 இலட்சமும், 20 வருடத்திற்கு மேல் ரூ. 3 இலட்சமும் நிதி உதவி வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் சான்றிதழ் இணையதள முகவரியில் www.bcmbcmw@tn.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை படியிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவத்துடன் பிற்சேர்ககை - II & III-ஐ பூர்த்தி செய்து அனைத்து உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களோடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மாவட்ட குழுவினரால் கிறித்துவ தேவாலயங்களை ஸ்தல ஆய்வு செய்து, கட்டடத்தின் வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு ஆகியவற்றுடன் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்து முன்மொழிவுடன் சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு நிதி உதவி வேண்டி பரிந்துரை செய்யப்படும். நிதி உதவி இரு தவணைகளாக தேவாலயத்தின் வங்கிக் கணக்கில் மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்தப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.